Mobile Hospital for Hosur Taluk

* 848 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is a proposal before the Government to sanction at least one mobile hospital for Hosur Taluk in Dharmapuri District ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) அவ் வட்டத்தில் அரசின் நடமாடும் மருத்துவமனை ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மருத்துவ மாதுகள்

*** 849 வினா—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களின் தாய்-சேய் நல விடுதிகளில் பணியாற்றும் மருத்துவ மாதுகளையும், ஆயாக்களையும் மருத்துவத் துறையின் நிர்வாகத்திற்குக் கொண்டுவர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. கா. காளிமுத்து : அப்படியானால் அது எப்போது செயல்படுத்தப்படும் ? ஏதாவது காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது அந்தத் துறையைச் சார்ந்த இலாகாச் செயலாளரிடத்தில் பரிசீலனையில் இருக்கிறது. இன்னொரு இலாகாவின் மேற்பார்வையும் இருக்கும் காரணத்தால் அவர்களுடைய ஒப்புதலும் பெற்றுத்தான் முடிவு எடுக்கப்படும்.

Handloom weavers in Paramakudi

* 850 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state :